## சட்ட உதவி ஆணைக்குழு - 2014

சட்ட உதவி ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 27 ஆம் இலக்க சட்ட உதவிச் சட்டத்தின் 23(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சட்ட உதவி ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 1, நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**- நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்றுத் தவிர அதன் நிதிக்கூற்றுக்கன் முழுவதும் அட்டுறு கணக்கீட்டு அடிப்படையை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 5,083,073 தொகையான வெகுமதிக் கொடுப்பனவுகள் அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும், இந்தக் கொள்கை நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 02, காசுப் பாய்ச்சல் கூற்று**- நியமத்தின் 22 மற்றும் 30 ஆம் உப பிரிவின் பிரகாரம், அவற்றின் பணிக்கொடை ஏற்பாடு மற்றும் கொடுப்பனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் புறம்பாக காட்டப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஏற்பாடு மற்றும் கொடுப்பனவுகளிற்கு இடையிலான வித்தியாசம் காசுப் பாய்ச்சல் கூற்றில் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(இ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3, கணக்கீட்டுக் கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளிலுள்ள மாற்றங்கள் - ரூபா 7,233,575 தொகையான பணிக்கொடை ஏற்பாட்டின் முன்னைய காலத் தவறுகள் நியமத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஈ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்** - நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அதனை பயன்பாட்டிற்கு கிடைத்த போது தொடங்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஆணைக்குழு இந்த வேண்டுகைக்கு முரணாக சொத்துக்கள் கொள்வனவு ஆண்டில் முழுமையாக பெறுமானத்தேய்வும் கைதவிர்க்கும் ஆண்டில் பெறுமானத்தேய்வு சாட்டுதல் செய்யப்படாமலுமிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுத் திறைசேரியின் எந்தவொரு பிரதிநிதித்துவமும் இல்லாமல் மானியம் தொடர்பில் 2012 இல் ஆணைக்குழுவின் தலைவருக்கும் ஐரோப்பிய சங்கத்திற்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இந்த உடன்படிக்கையின் கீழ் ரூபா 42,818,922 ஆன மானியம் பெறப்பட்டிருந்தது.

எனினும் இது ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு ஆண்டிற்குள் முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருக்காத போதிலும் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் ரூபா 22,331,361 தொகையான பணிக்கொடைக்கான ஏற்பாடு கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) 237 ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 690,422 தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டு தொடர்பில் ரூபா 1,497,364 தொகையான பதிவுக் கட்டண வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) அமைச்சின் வாக்குப் பணப் பேரேட்டின் பிரகாரம், ஆணைக்குழுவின் சார்பில் ஏற்பட்ட செலவினமாக ரூபா 24,000,000 தொகை காட்டப்பட்டிருந்தது. அதேநேரம், செலவினமாக ஆணைக்குழுவின் நிதிக் கூற்றில் ரூபா 20,847,077 தொகை மாத்திரமே காட்டப்பட்டிருந்ததுடன் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,152,923 ஆன வித்தியாசம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு வரைவுப் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டு அவற்றிற்கு அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டிற்கான பாதீடு மீளாய்வாண்டு இறுதி வரையும் ஆணைக்குழுவால் அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம்- 168 | பணம், காசோலைகள் காசுக் கட்டளைகள் போன்றவற்றின் பெறுகையின் போது உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 21,107,217 தொகையான பணம் மற்றும் காசோலைகள் பெறுவனவு தொடர்பில் ஆணைக்குழுவால் அத்தகைய பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம்- 756 | மீளாய்வாண்டிற்கான சொத்துக்களின் வருடாந்த சொத்துக்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) நிதிப்பிரமாணம்- 1646 | மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் வாகனங்களின் மாதாந்த செயலாற்றல் பொழிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஈ) ஆம் பிரிவு | 2014 திசெம்பர் 31 வரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆணைக்குழுவின் பதவியணிக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 ஏப்ரல் 10 ஆந்திகதிய 28 ஆம் இலக்கம் மற்றும் 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைகளின் பிரகாரம், நிரந்தர, தற்செயலான அல்லது ஏதாவது வேறு அடிப்படையில் சகல பதவியணியினரின் சேர்ப்பனவுகள் நிறுத்தப்படுவதோடு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னங்கீகாரத்துடன் மாத்திரமே செய்யப்பட வேண்டியிருந்தது. இருந்தபோதிலும், ஆணைக்குழு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னங்கீகாரம் இல்லாமல் மீளாய்வாண்டின் போது தற்செயலான அடிப்படையில் 06 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், அந்த ஊழியர்களிற்காக, சம்பளம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியமாக முறையே ரூபா 1,118,247 மற்றும் ரூபா 134,189 மற்றும் ரூபா 33,547 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 31/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், ஆண்டிற்கான பண்டிகை முற்பணமாக ஒரு ஊழியருக்கு ரூபா 5,000 மாத்திரமே செலுத்த முடியும். எவ்வாறாயினும், ஆணைக்குழு சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக ஒரு ஊழியருக்கு ரூபா 10,000 வீதம் ரூபா 1,716,000 தொகையை மொத்தமாக செலுத்தியிருந்தது. மேலும், 2000 சனவரி 11 ஆந் திகதிய பிஎவ்/பிஈ/5 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இது தொடர்பில் வேண்டப்பட்ட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,222,372 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 10,779,342 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளால் 8,556,969 ஆன மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ரூபா 36,440,401 அல் வருமானம் அதிகரித்தமைக்கு எதிராக செலவானது ரூபா 44,997,370 ஆல் அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களிப்புச் செய்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்

தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஆணைக்குழுவின் செயலாற்றல் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஆணைக்குழு மற்றும் அதன் பிராந்திய நிலையங்கள் மீளாய்வாண்டின் போது 20,746 நீதி மன்ற வழக்குகளை தீர்த்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 வரை தீர்க்கப்படாதிருந்த நீதி மன்ற வழக்குகளின் எண்ணிக்கை 20,625 ஆக இருந்தது. மேலும், வழக்குகளை தீர்க்கும் பிராந்திய நிலையங்களின் செயலாற்றல் 50 சதவீதத்தை விட குறைவாக இருந்தது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருக்காததுடன் உள்ளக கணக்காய்வின் செயற்பாடுகள் உரிய அமைச்சால் மேற்கொள்ளப்பட்டன.

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

ஆணைக்குழுவிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கும் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.5 பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை 2015 ஆகஸ்ட் வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு